புதுச்சேரி, ஜன. 20: ஜனவரி 26 குடியரசு தினத்தையொட்டி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புதுச்சேரியில் போலீசார் தீவிர கண்காணிப்பு மற்றும் வாகன சோதனையில் ஈடுபட தொடங்கி விட்டனர். ஒதியஞ்சாலை இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் தலைமையிலான போலீசார், நேற்று இரவு அண்ணா சிலை அருகே ஆம்பூர் சாலை- புஸ்சி வீதி சந்திப்பில் அதிரடி வாகன சோதனை நடத்தினர். வாகனங்களில் வந்தவர்களிடம் ஆவணங்கள் சரியாக இருக்கிறதா? என ஆய்வு செய்தனர். மேலும், அதிவேகத்தில் வந்தவர்கள், ஒரே பைக்கில் 3 பேர் வந்தவர்களை பிடித்து விசாரித்தனர். அதேபோல், ஒதியஞ்சாலை காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட ஒயிட்டவுன் பகுதிகள் உள்ள தங்கும் விடுதிகளிலும் போலீசார் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

விடுதிக்குள் தங்கியிருக்கும் நபர்கள் பற்றிய விவரங்களை சேகரித்தனர். மேலும், லாட்ஜ்களில் தங்குவதற்கு வரும் நபர்களிடம் அடையாள ஆவணங்களை வாங்கி சரிபார்த்த பிறகே அறையை கொடுக்க வேண்டும் என மேலாளர்களிடம் போலீசார் அறிவுறுத்தினர். சந்தேக நபர்கள் தென்பட்டால் அதுபற்றி உடனடியாக தகவல் தெரி

டிராக்டர் திருடிய வாலிபர் கைது

புதுச்சேரி, ஜன. 21: புதுவை நைனார்மண்டபம் பகுதியை சேர்ந்தவர் தியாகராஜ் (43). டிராக்டர் மூலம் தொழில் செய்து வருகிறார். இவர் கடந்த 18ம் தேதி புதுச்சேரி- கடலூர் சாலையில் உள்ள நீதிமன்ற வளாகத்தின் அருகே சாலையோரம் டிராக்டரை நிறுத்தியுள்ளார். பின்னர் மறுநாள் தியாகராஜ் அங்கு சென்று பார்த்தபோது டிராக்டர் காணாமல் போயிருந்தது கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

உடனே இச்சம்பவம் குறித்து தியாகராஜ் உருளையன்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிந்து, அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா மூலம் ஆய்வு செய்தனர். இந்நிலையில் வில்லியனூர் ஆரியப்பாளையம் பகுதியில் சந்தேகப்படும்படியாக டிராக்டரை ஓட்டி வந்த வாலிபரை போலீசார் பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அந்த வாலிபர் சீர்காழியை சேர்ந்த வரதராஜன் (எ) சுந்தரராஜன் (29) என்பது தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் அவரை விசாரித்தபோது, சுந்தரராஜன் சென்னைக்கு வேலை தேடி செல்லும்போது, புதுச்சேரியில் இறங்கி மது அருந்தியுள்ளார்.



பின்னர் போதையில் படுத்திருந்தபோது, அவருடைய செல்போன், பணம் ஆகிய வற்றை மர்ம நபர்கள் திருடி சென்றுள்ளனர். இதனால் ஊருக்கு எப்படி செல்வது என யோசித்தபோது, அவரது கண்ணில் டிராக்டர் தெரிந்தது. உடனே சுந்தரராஜன் டிராக்டரை திருடி சென்றதாக கூறினார்.

இதையடுத்து போலீசார் அவரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். மேலும் அவரிடம் இருந்த போலீசார் டிராக்டரை பறிமுதல் செய்தனர்.

Dinamalar 'K'

புதுச்சேரியில் நாட்டு வெடிகுண்டு வீசி மூன்று சிறுவர்கள் உட்பட 5 பேர் கைது

நாட்டு வெடிகுண்டு வீசியது ஏன்: பரபரப்பு தகவல்கள்



■ நாட்டு வெடிகுண்டு வீசிய வழக்கில் கண்டாக்டர் தோட்டம் தேமத்த், குபேரர் நகர் விஜயராகன் ஆகிய இருவரை பெரியக்கடை இன்ஸ்பெக்டர் ஜெய்சங்கர், சப்இன்ஸ்பெக்டர் முருகன் தலைமையிலான போலீசார் கைது செய்தனர்.

புதுச்சேரி, ஜன. 21– புதுச்சேரி கோவிந்த சாலை வாஞ்சிநாதன் வீதியில் உள்ள ஒரு வீட்டின் அருகே நேற்று முன்தினம் அதிகாலை, நாட்டு வெடிகுண்டு ஒன்று அதிக சத்துடன் வெடித்து சிதறியது.

வெடிகுண்டு சத்தம் கேட்டு பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தபோது, புகை மண்டலமாக இருந்தது.

பெரியக்கடை இன்ஸ்பெக்டர் ஜெய்சங்கர் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினர். வாஞ்சிநாதன் வீதியில் உள்ள சி.சி.டி.வி., கேமராக்களை ஆய்வு செய்தனர். அப்போது, 6 பேர் கொண்ட கும்பல், வாஞ்சிநாதன் வீதி வழியாக பைக்கில் செல்வதும், அப்போது கையில் வைத்திருந்து நாட்டு வெடிகுண்டை சாலையில் வீசி வெடிக்க செய்திருப்பது தெரியவந்தது.

போலீசார் தொடர் விசாரணையில், நாட்டு வெடிகுண்டு வீசியது கண்டாக்டர் தோட்டம், லோகபிரகாஷ், 19; அவரது கூட்டாளிகள் தேமத், 18; குபேர் நகர், விஜயராகவன், 19; மற்றும் 17 வயது சிறார்கள் மூவர் ஈடுப்

வந்தது. இதில், தேமத்த், விஜயராகவன் மற்றும் 3 சிறார்களை பெரியக்கடை போலீசார் நேற்று கைது செய்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில், லோகபிரகாஷ்க்கும், அதே பகுதியைச் சேர்ந்த ஸ்டிக்கர் மணி இருவருக்கும் முன் விரோதம் இருந்து வந்தது. இதில் லோகபிரகாஷ் உறவினர் மகளை ஸ்டிக்கர் மணி 2 நாட்களுக்கு முன்பு கேலி செய்துள்ளார். லோகபிரகாஷ், ஸ்டிக்கர் மணியை மொபைல்போனில் தொடர்பு கொண்டு, என் தங்கையை ஏன் கேலி

தான் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதில், ஸ்டிக்கர் மணி, லோகபிரகாஷ்சை கொலை செய்ய திட்டம் நீட்டி வருவதாக தகவல் பரவியது. அதற்கு முன்னதாக ஸ்டிக்கர் மணியை நீர்த்து கட்டலோகபிரகாஷ் திட்டமிட்டுள்ளார். இதற்காக தனது கூட்டாளிகள் மூலம் அரியாங்குப்பம் சென்று பட்டாக்கள் வாங்கி வந்து, அதில் இருந்த வெடி மருந்தை தனியாக பிரித்து எடுத்து நாட்டு வெடிகுண்டு செய்தனர்.

18ம் தேதி இரவு முழுதும் ஸ்டிக்கர் மணியை கொலை செய்ய நாட்டு வெடிகுண்டு

சிறார்கள் குற்றங்களில் ஈடுபடுவதை தடுக்க தனி கவனம் தேவை

ஆப்ரேஷன் திரிசூல் மூலம் கண்டாக்டர் தோட்டம் பகுதி குற்ற பின்னணி கொண்டவர்கள், ரவுடிகள் வீடுகளில் போலீசார் அடிக்கடி சோதனை நடத்துகின்றனர். ஆனால், இதுபோன்று வெடிகுண்டு தயாரித்து கொலை செய்யும் முயற்சி நடப்பது அப்பகுதி மக்களை பீதியில் ஆழ்த்தி உள்ளது. தொடர் குற்ற சம்பவம், வெடிகுண்டு தயாரிப்பு உள்ளிட்ட வழக்கில் உள்ள நபர்களால், அப்பகுதி சிறார்களும் அதே பாதையை தேர்வு செய்து செல்கின்றனர்.

எனவே, கண்டாக்டர் தோட்டம் அரசு குடியிருப்புகளில் வசிக்கும் குற்றப்பின்னணி கொண்ட ரவுடிகள், நபர்களை அடையாளம் கண்டு, மாவட்ட கலெக்டர் மூலம் குடியிருப்பில் இருந்து ரவுடிகளை வெளியேற்ற வேண்டும் அல்லது அரசு வழங்கிய குடியிருப்பு ஆணையை ரத்து செய்தால், அடுத்து வரும் சந்ததிகள் ரவுடிகளாகவும், வெடிகுண்டு தயாரிக்கும் நபர்களாகவும் உருவாகுவது முற்றிலும் தடுக்கப்படும்.

டன் கற்றிந்திரித்தனர்.

ஸ்டிக்கர் மணி கிடைக்காத விரக்தியில், லோகபிரகாஷ் கும்பல் வாஞ்சிநாதன் வீதியில் நாட்டு வெடிகுண்டை வீசி வெடிக்க செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட தேமத்த், விஜயராகவன் மற்றும் 3 சிறார்கள் புதுச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

தேமத்த், விஜயராகன் காலாப்பட்டு சிறைக்கும், 3 சிறார்கள் சிறுவர்கள் கூர்நோக்கு இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தப்பியோடிய லோகபிரகாசை போலீசார் தேடி வருகின்றனர்.

சிறுமியின போட்டோவை மார்பிங் செய்து உலிசாத்துக்கு அழைத்த வாலிபர்

சினிமா பாணியில் பொறி வைத்து பிடித்த சைபர் கிரைம் போலீசார்

பல பெண்களின் அந்தரங்க வீடியோ பறிமுதல்



மிரட்டல் வந்தால் புகார் தெரிவிக்க வேண்டும்



வாகனம் ஓட்டி சிக்கிய 19 சிறார்களின் பெற்றோருக்கு போக்குவரத்து போலீஸ் கடும் எச்சரிக்கை

தினமலர் செய்தி எதிரொலி





கமாண்டோ பிரிவு போலீசார் ரோந்து

பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் அச்சம்





மதுபோதையில் தாறுமாறாக பள்ளி வாகனம் ஓட்டிய டிரைவர்

மடக்கி பிடித்த போலீசுக்கு பாராட்டு





மூனறு போ கொலை வழக்கில் ரவுடியின் காதலி உட்பட மூவர் கைது





3 போ் கொலை வழக்கில் 10 போ் சிறையில் அடைப்பு





சாலை பாதுகாப்பு வாரம விழிப்புணர்வு போட்டி





லோன ஆப மூலம் ரூ.650 கோடி மோசடி வழக்கில் பெங்களூரு வாலிபர் கைது





வலையனூர்- பத்துகண்ணு ரயில்வே கேட்டில்

குண்டும், குழியுமான சாலையை சரி செய்த அரசு ஊழியர்கள்



▶ வில் லி யனூர் - பத் துக் கண் ணு செல் லும் சாலையில் ரயில்வே ஊழியர், போக்குவரத்து போலீசார் மண் கொட்டி சமன் செய்தனர்.

வீடியோ வைரல்

புதுச்சேரி, பிப். 2: புதுச்சேரி- விழுப்புரம் ரயில்வே இருப்பு பாதையில் பராமரிப்பு பணிகள் கடந்த சில நாட்களாக நடைபெற்று வருகிறது. இதனால் வில்லியனூரில் இருந்து பத்துக் கண்ணு செல்லும் சாலையில் தற்போது ஜல்லிகள் பெயர்ந்து சாலையில் திதறி கிடப்பதால் வாகன ஓட்டிகளும், பாதசாரிகளும் ரயிலே பாதையை கடக்க முயற்சிக்கும் போது கடுமையான சிரமம் அடைந்தனர். மேலும் அடிக்கடி விபத்துகளும் ஏற்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்று காலை அங்கு பணியில் இருந்த ரயில்வே ஊழியர் வில்லிய னூர் போக்குவரத்து காவலர் தேசு அவர்கள் மேற்பார்வையில் பொதுமக்களின் பெரும் எதிர்பார்ப்பை கண்டும் மனம் பொறுக்க முடியாமல் மண் கொட்டி மூலம் அருகில் இருந்த மண்ணை அள்ளி குண்டும் குழியுமாக இருந்த சாலையில் கொட்டி சமன் செய்தனர்.

அப் போது அவ் வழியே மணல் ஏற்றி வந்த டிப்பர் லாரி டிரைவரிடம் மண்ணை கேட்டு வாங்கிய இருவரும் லாரியின் மீது ஏறி மண்ணை எடுத்து சாலையில் போட்டு சமன் செய்தனர். பொதுமக்கள் விபத்து ஏற்படாமல் பாதுகாப்பாக செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் ரயில்வே ஊழியரும், போக்குவரத்து காவலரும் சாலையை சமன் செய்த இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருவதுடன் பொதுமக்களும் அவர்களை வெகுவாக பாராட்டி வருகின்றனர்.



காலாக்கார்நகர போலீஸ்நிலையத்தில் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு வெங்கடேஸ்வரா பொதுமக்களி முறைகளை கேட்டறிந்த காட்சி.

போது இடங்களில் மது குடித்தால் கடும் நடவடிக்கை

சீனியர் போலீஸ் சூப்பிரண்டு எச்சரிக்கை

இருளன்று, பிப்.2- காரைக்கால் நகரபோலீஸ் நிலையத்திற்கு நகரபொதுமக்கள் குறைதீர் கூட்டத்தில் பொது இடங்களில் மதுபழ போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சீனியர் போலீஸ் சூப்பிரண்டு கூறினார்.

நகரபேருந்து நிலையம்

காரைக்கால் மாவட்டத்தில் மனைத்து போலீஸ் நிலையங்களிலும் நேற்று குறைதீர்க்கும் கூட்டம் நடத்தது. காரைக்கால் நகர போலீஸ் நிலையத்தில் நடந்த நகரம் மக்கும் கூட்டத்திற்கு மாவட்ட எஸ்பி போலீஸ் சூப்பிரண்டு டாக்டர்.வெங்கடேஸ்வரா தலைமை தாங்கினார். போலீஸ் சூப்பிரண்டு பிரபாவின் முன்னிலையில் நடைபெற்றது. இதில் இன்ஸ்பெக்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பொக்குவரத்து நெரிசல்

கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து சாலைகளிலும் போக்குவரத்து நெரிசல் காணப்படுவதை நகர பகுதியில் சாலையின் இருமுனும் வாகனங்கள் நிறுத்தப்படுவது. இதனால் அவசரமாக ஆம்புலன்ஸ் செல்லும் ஆம்புலன்ஸ் போக்குவரத்து நெரிசலில் சிக்கி கொள்வது. இதனை சரிசெய்ய போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும். நகர மற்றும் புற நகர பகுதிகளில் பொது இடத்தில் மது அருந்துபவர்களிடமிருந்து மாவட்ட எஸ்பி போலீஸ் சூப்பிரண்டு உடனடியாக அபராதம் விதிக்க வேண்டும். சாலையில் நிற்கும் ஆட்டோக்களால் விபத்துகள் ஏற்படுவதாகவும் பேருந்து நிலையத்தில் ஆட்டோக்களை முறைப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

போக்குவரத்து மாற்றம்

இதற்கு பதிலளித்த சீனியர் போலீஸ் சூப்பிரண்டு வெங்கடேஸ்வரா இன்று மதியத்திற்குள் அனைத்து சாலைகளில் இருமுனும் வாகனங்கள் நிறுத்தப்படுவதை தடுக்கும் வகையில் அங்கு போக்குவரத்து மாற்றம் செய்யப்படும். இதனால் அவசரமாக ஆம்புலன்ஸ் செல்லும் போது தடையின்றி செல்ல வழிவகை செய்யப்படும். மேலும் பொது இடங்களில் மது அருந்துபவர்களிடம் அபராதம் விதிக்கப்படும். மேலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தும் வகையில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கும் அபராதம் விதிக்கப்படும் என்றார்.



அவசரகால உதவி குறித்து

ஆட்டோ டிரைவர்களுக்கு பயிற்சி

புதுச்சேரி, பிப்.16- விபத்துக்களில் சிக்குவோருக்கு அவசர காலத்தில் முதல் உதவி சிகிச்சை அளிப்பது தொடர்பாக ஆட்டோ டிரைவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. புதுவை முதலியார்பேட்டையில் உள்ள போக்குவரத்துத்துறை அலுவலக வளாகத்தில் இந்த பயிற்சி வழங்கப்படுகிறது.

பயிற்சியை புதுவை போக்குவரத்து சீனியர் போலீஸ் சூப்பிரண்டு பிரவீன்குமார் திரிபாதி தொடங்கி வைத்தார். ஆட்டோ டிரைவர்களுக்கு இந்த பயிற்சி காலை 9.30 மணி முதல் மாலை 5 மணிவரை நடந்தது. இன்றும் (ஞாயிற்றுக்கிழமை) இந்த பயிற்சி நடக்கிறது.

காலப்பட்டில் பழக்கடை பெண் வியாபாரியிடம்

தாலி சங்கிலி பறித்த சிறுவர்கள் உள்பட 4 பேர் கைது

நகையை விற்று நண்பர்களுக்கு விருந்து வைத்த ரவுடி

காலப்பட்டு பிப்7- காலப்பட்டில் பழக்கடை பெண் வியாபாரியிடம் தாலி சங்கிலி பறித்த சிறுவர்கள் உள்பட 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

9 பவுன் தாலி சங்கிலி பறிப்பு

புதுவை பெரிய காலப்பட்டு முருகன் கோவில் வீதியை சேர்ந்தவர் ஏழுமலை. இவரது மனைவி வீரலட்சுமி (வயது 52). இவர் காலையில் பழக்கடை வைத்துள்ளார். கடந்த 31-ந்தேதி இரவு வியாபாரத்தை முடித்துவிட்டு வீட்டுக்கு செல்ல இ.சி.ஆர். சாலையில் பழக்கடை வைத்துள்ளார். கடந்த 31-ந்தேதி இரவு வியாபாரத்தை முடித்துவிட்டு வீட்டுக்கு செல்ல இ.சி.ஆர். சாலையை கடந்து சென்றார்.

அப்போது பின்தொடர்ந்து வந்த நிறுவன், வீரலட்சுமியின் கழுத்தில் இருந்த 9 பவுன் தாலி சங்கிலியை பறித்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றான். இது குறித்த புகாரின்பேரில் காலப்பட்டு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

நகையை விற்று விருந்து

வழிப்பறி திருட்டில் ஈடுபட்டவர்களை தேடி போலீஸ் சூப்பிரண்டு கலைவாணன் உத்தரவின்பேரில் சப்-இன்ஸ்பெக்டர் வடக்குதாராவண்ண தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது.

இந்த தனிப்படையினர் சம்பவம் நடந்த பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர். அப்போது வீரலட்சுமியிடம் நகையை ஒருவன் நூதனமுறையில் பறித்து சென்றது பதிவாகி இருந்தது. அவன் தப்பிச்சென்ற மோட்டார் சைக்கிள் பெரிய காலப்பட்டு பகுதியை சேர்ந்த ரவுடி ரூபா என்கிற முருகன் (28) சொந்தமானது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

4 பேர் கைது

இதையடுத்து நேற்று முன்தினம் மதியம் பெரியகாலப்பட்டு பகுதியில் பதுங்கி இருந்த ரவுடி ரூபா, முருகன் (19), ராமமூர்த்தி (19) மற்றும் 17 வயது சிறுவன் ஆகிய 4 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 9 பவுன் தாலி சங்கிலி, 4 குற்றவாட்டப்பட்ட இருசக்கர வாகனங்கள், 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் அவர்கள் விற்பனை செய்த தாலி சங்கிலி, குற்றவாட்டப்பட்ட இருசக்கர வாகனம் ஆகியவற்றை விற்று கிடைத்த ரூ.5 லட்சம் பெற்றுக்கொண்டு, அதில் ஒரு பகுதியை நண்பர்களுக்கு விருந்து வைத்துள்ளனர்.







ரவுடி ரூபா

ராமமூர்த்தி

போலீசாரால் கைப்பற்றப்பட்ட தங்க கட்டி, ரொக்க பணம் மற்றும் செல்போன்கள்.

ரவுடி முருகனை பிடித்து விசாரித்தனர். வழிப்பறி ரவுடி முருகன் திட்டம் போட்டு கொடுத்துள்ளான். அந்த நகையை பெரிய காலப்பட்டை சேர்ந்த ராமமூர்த்தி (44) மூலம் புதுவை தெரு வியில் உள்ள ஒரு அடகுகடையில் விற்பனை செய்து ரூ.5 லட்சம் பெற்றுள்ளார். அந்த பணத்தில் கடனை அடைத்து விட்டு, மீதமுள்ள பணத்தில் முருகன் தனது கூட்டாளிகளுக்கு மது விருந்து வைத்துள்ளார்.

இந்த வழக்கில் ரவுடி ரூபா, ராமமூர்த்தி மற்றும் 16 வயதுக்குட்பட்ட 2 சிறுவர்கள் என 4 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 9 சவரன் மற்றும் 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் அவர்கள் விற்பனை செய்த தாலி சங்கிலி, குற்றவாட்டப்பட்ட இருசக்கர வாகனம் ஆகியவற்றை விற்று கிடைத்த ரூ.5 லட்சம் பெற்றுக்கொண்டு, அதில் ஒரு பகுதியை நண்பர்களுக்கு மது விருந்து வைத்துள்ளனர். அந்த பணத்தில் கடனை அடைத்து விட்டு, மீதமுள்ள பணத்தில் முருகன் தனது கூட்டாளிகளுக்கு மது விருந்து வைத்துள்ளனர்.

இந்த வழக்கில் ரவுடி ரூபா, ராமமூர்த்தி மற்றும் 16 வயதுக்குட்பட்ட 2 சிறுவர்கள் என 4 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 9 சவரன் மற்றும் 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் அவர்கள் விற்பனை செய்த தாலி சங்கிலி, குற்றவாட்டப்பட்ட இருசக்கர வாகனம் ஆகியவற்றை விற்று கிடைத்த ரூ.5 லட்சம் பெற்றுக்கொண்டு, அதில் ஒரு பகுதியை நண்பர்களுக்கு மது விருந்து வைத்துள்ளனர்.

புதுச்சேரியில் பரபரப்பு

பிச்சைக்காரன் வேடமிட்டு மதுக்கடையில் பணத்தை திருடிய ஆசாமி கைது

₹1.31 லட்சம் பறிமுதல்

புதுச்சேரி, பிப். 11: புதுச்சேரியில் பிச்சைக்காரன் வேடமிட்டு மதுக்கடையில் பணம் திருடிய ஆசாமியை போலீசார் கைது செய்தனர். அவரிடமிருந்து 1.31 லட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

புதுச்சேரி பாரதி வீதியில் உள்ள தனியார் மதுபான கடையில் கடந்த 6-ந் தேதி இரவு ஊழியர்கள் கடையை பூட்டி விட்டு சென்றனர். மறுநாள் கடையை திறக்க கடையின் மேலாளர் லட்சுமணன் வந்தபோது கடையின் பூட்டர் உடைக்கப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். பின்னர் லட்சுமணன் கடையின் உள்ளே சென்று கல்லா பெட்டியில் பார்த்தபோது, அதில் வைக்கப்பட்டிருந்த 75 ஆயிரம் பணம் மற்றும் கடையில் இருந்த பணம் பையும் மர்ம நபர் திருடி சென்று இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

பின்னர் இச்சம்பவம் குறித்து லட்சுமணன் ஒதியஞ்சாலை காவல் நிலையத்தில் புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தினர். சீனியர் எஸ்பி (பொ) பிரவீன்குமார் நிர்பாதி தலைமையில், இருக்கு எஸ்.பி. நகுலாயகம் மேற்பார்வையில், இன்ஸ்பெக்டர் செந்தில்குமார், ஒதியஞ்சாலை குற்றப்பிரிவு போலீசார் மற்றும் கிழக்கு குற்றப்பிரிவு போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது அந்த கடையின் அருகே உள்ள அனைத்து சிடிவி கேமராக்களை போலீசார் ஆய்வு செய்தனர். அதில் கடையின் அருகே சிசக்காரர் ஒருவர் செல்வது பதிவாகி உள்ளது. இதை வைத்து போலீசார் தனிப்படை அமைத்து தேடி வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை புதுவை வம்பாகீரை பாலையத்தில் உள்ள அவரது உறவினர் வீட்டுக்கு வந்துள்ளார். பின்னர் காலை முழுவதும் வீட்டை விட்டு வெளியே வராமல் இரவில் பிச்சைக்காரன் போல் வேடமிட்டு ஒயிட் டவுன் பகுதியில் நோட்டமிட்டு, பாரதி வீதியில் உள்ள தனியார் மதுபான கடையில் இருந்த பணத்தை கொள்ளையடித்தது ஒப்புக்கொண்டார்.

தொடர்ந்து போலீசார் அவரிடம் இருந்த ₹1.31 லட்சம் பணம், வெள்ளி பிரேஸ்லெட்டை பறிமுதல் செய்தனர். இதையடுத்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காவலுக்கு அனுப்பட்டார். மேலும் இவரிடம் மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.



▶ தனியார் மதுபான கடையில் பணத்தை திருடி பணத்துடன் கைதான மனோகர்.

ஆக்கிரமிப்பாளர்கள் மீது போலீஸ் வழக்கு

புதுச்சேரி, பிப். 3- புதுச்சேரியில் சாலையை ஆக்கிரமித்திருந்த கடைகளை போக்குவரத்து போலீசார் அகற்றினர்.

புதுச்சேரியில், முக்கிய சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள சாலையோர ஆக்கிரமிப்புகளை போக்குவரத்து போலீசார் அகற்றி வருகிறார்கள். அதன் ஒருபகுதியாக அஜந்தா சிக்னல் சந்திப்பு முதல் முத்தியால் பேட்டை ஏழை மாரியம்மன் கோவில் வரை இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி நேற்று நடந்தது.

போக்குவரத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் நாகராஜன் தலைமையிலான போலீசார் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, அந்த பகுதியில் சாலையை ஆக்கிரமித்து கடைகள் அமைத்திருந்த 4 கடைக்காரர்கள் மீது போக்குவரத்து போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.



▪ போக்குவரத்திற்கு இடையூறாக சாலையில் ஆக்கிரமித்திருந்த கடைகளை போக்குவரத்து இன்ஸ்பெக்டர் நாகராஜன் தலைமையில் போலீசார் அகற்றினர்.

பாலியல துன்புறுத்தல் தடுப்பு குழு தலைவர் நியமனம்



அனிதா ராய்

புதுச்சேரி, பிப்.10- பாலியல் துன்புறுத்தலை தடுப்பதற்கான காவல் துறை குழுவின் தலைவராக சீனியர் எஸ்.பி., அனிதா ராய் நியமிக்கப்பட்டுள்ளார்.

பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தலைத் தடுப்பதற்காக, மாநில அளவில் குழு அமைக்கப்பட்டுள்ளது.மேலும், பணிபுரியும் இடங்களில் பாலியல் துன்புறுத்தலை தடுக்க ஒவ்வொரு துறைகளிலும் உள்ளூர் குழு அமைக்கப்பட்டு வருகிறது.

பெண்கள் பணிபுரிய வசதியாகவும், உகந்ததாகவும் இருக்கும் பணிச்சூழலை உறுதி செய்வதையும், பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் இல்லை என்பதை உறுதி செய்வதையும் இந்த குழுவின் முதன்மையான நோக்கமாக உள்ளது.

அதன்படி, புதுச்சேரி காவல் துறையில் பாலியல் துன்புறுத்தலை தடுப்பதற்கான குழுவின் தலைவராக சீனியர் எஸ்.பி., அனிதா ராய் நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்குழுவில் எஸ்.பி., ரச்சனாசிங் செயலாளராகவும், மகளிர் சப் இன்ஸ்பெக்டர் அகல்யா, வித்யா ராம்குமார் ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை போலீஸ் தலைமையக எஸ்.பி., சுபம் கோஷ் பிறப்பித்துள்ளார்.

புதுச்சேரியில் 36 இடங்களில்

தானியங்கி போக்குவரத்து சிக்னல்கள் அமைக்கும் பணி நிறைவு

சீனியர் எஸ்பி, அதிகாரிகள் ஆய்வு



புதுச்சேரி சோனாம்பாளையம் சந்திப்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தானியங்கி போக்குவரத்து சிக்னல்கள் செயல்பாடு குறித்து சீனியர் எஸ்பி நாரா சைதன்யா எஸ்பி செல்வம் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

புதுச்சேரி, பிப். 13: புதுச்சேரியில் நாளுக்கு நாள் வாகன பயணிகளின் வருகை அதிகரித்துக் கொண்டே போகிறது. சுற்றுலா பயணிகள் குவிவதால் வாரயிறுதி மற்றும் பண்டிகை, விடுமுறை நாட்களில் தமிழக, புதுச்சேரி போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது குறிப்பாக ராஜிவ் காந்தி சிக்னல், இந்திராகாந்தி சிக்னல், நெல்லித்தோப்பு சிக்னல், செஞ்சி சாலை, ஆம்பூர் சாலை, காமராஜர் சாலை, புஸ்சி வீதி, அண்ணா சாலை, காந்தி வீதி, நேரு வீதி உள்ளிட்ட பகுதிகளில் வாகனங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. காவலர்கள் பணியில் இருந்தாலும் பல நேரங்களில் நெரிசலை கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்நிலையில் நெரிசலை குறைக்கவும், கலாமான போக்குவரத்தை காவலும், போக்குவரத்து விதிமீறல்களை கண்டுபிடிக்கவும் புதுச்சேரி நகரப் பகுதிகளில் மொத்தம் 36 இடங்களில் தானியங்கி போக்குவரத்து சிக்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 14 இடங்களில் முழுமையாக சிக்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 19 சிக்னல்கள் அமைக்கும் பணி கடந்த 2 மாதங்களுக்கு முன்பே முடிவடைந்து விட்டது. அவை சரிவர செயல்படுகிறதா? என அதிகாரிகளும் ஆய்வு செய்தனர்.

இந்நிலையில் புதுச்சேரி பகுதியில் மீதமுள்ள 17 தானியங்கி போக்குவரத்து சிக்னல்கள் அமைக்கும் பணியும் தற்போது முடிவடைந்துள்ளது. இந்த சிக்னல்களை செயல்பாடுகள் குறித்து போக்குவரத்து சீனியர் எஸ்பி நாரா சைதன்யா வடக்கு மேற்கு போக்குவரத்து ஆய்வாளர் எஸ்பி செல்வம் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

இன்ஸ்பெக்டர் நாகராஜ் தலைமையில் நேற்று நள்ளிரவு மரப்பாலம் சந்திப்பில் திடீர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக பைக்கில் சென்றவர்களை மடக்கிப்பிடித்து சோதனை செய்தனர். இதில் அவர்களின் பைக்குகளின் ஆவணங்கள் மற்றும் அவர்கள் ஏற்கனவே குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்களா? என சோதனை செய்தனர். போலீசார் திடீரென நள்ளிரவில் வாகன சோதனையில் ஈடுபட்ட சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

நள்ளிரவில் போலீசார் தீவிர வாகன சோதனை

புதுச்சேரி, பிப். 18: புதுச்சேரியில் 3 ரவுடிகள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து போலீசார் ரோந்து பணியை தீவிரப்படுத்த வேண்டும் என உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் போலீசாருக்கு உத்தரவிட்டுள்ளார். அதன்படி முதலியார்பேட்டை காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் ஜெயபிரகாஷ் தலைமையில் நேற்று நள்ளிரவு மரப்பாலம் சந்திப்பில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக பைக்கில் சென்றவர்களை மடக்கிப்பிடித்து சோதனை செய்தனர். இதில் அவர்களின் பைக்குகளின் ஆவணங்கள் மற்றும் அவர்கள் ஏற்கனவே குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்களா? என சோதனை செய்தனர். போலீசார் திடீரென நள்ளிரவில் வாகன சோதனையில் ஈடுபட்ட சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.



முதலியார்பேட்டை போலீசார் மரப்பாலம் சந்திப்பில் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

தவளக்குப்பத்தில்

பேருந்தில் மாணவிகளிடம் சில்மிஷம் செய்த சென்னை வாலிபர்கள் கைது



தவளக்குப்பம், பிப். 22: புதுச்சேரியிலிருந்து கடலூர் செல்லும் தனியார் பேருந்து ஒன்று நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் தவளக்குப்பம் வழியாக சென்று கொண்டிருந்தது. அதில் 2 வாலிபர்கள் அதிக மது குடித்துவிட்டு பின்புறமாக ஏறினர். தொடர்ந்து கூட்ட நெரிசல் அதிகமானதால் பேருந்தில் இருந்த மாணவிகளிடம் அவர்கள் இருவரும் அத்துமீறி சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளனர். ஒரு கட்டத்தில் இதனை பொறுத்துக் கொள்ள முடியாமல் தவித்த மாணவிகளை கண்ட மற்ற பயணிகள் அந்த இருவரையும் சரமாரியாக தாக்கினர். பிறகு பேருந்து தவளக்குப்பம் நான்கு முனை சந்திப்பில் நின்றபோது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த பெண் காவலர்களை கண்டதும் அந்த 2 வாலிபர்களை இதக்கி காவலர்களிடம் ஒப்படைத்து நடந்ததை கூறி விட்டு சென்றுவிட்டனர்.

அதனை தொடர்ந்து அங்கிருந்த பொதுமக்கள் தரம் அடி கொடுத்தோடு அவர்களை போலீசார் உதவியுடன் தவளக்குப்பம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். அங்கு அவர்களிடம் விசாரணை நடத்தியதில் அவர்கள் சென்னை அம்பத்தூரை சேர்ந்த ரங்கநாதன் மகன் ராகவன் (22), கரிக்காலன் மகன் சதீஷ் (23) என்பது தெரியவந்தது. இதையடுத்து அவர்களை இருவர் மீதும் சப்-இன்ஸ்பெக்டர் சண்முகசத்தியா தலைமையில் உதவி சப்-இன்ஸ்பெக்டர் ஷரேஷ் வழக்குப் பதிந்து கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

ஆனலைன் மூலம் 11 பேரிடம்

போலி பங்கு சந்தையில் முதலீடு செய்ய வைத்து ₹10 கோடி மோசடி

புதுவை வாலிபர் கைது



மூன்றில் ஒரு பங்கு போலீசாருக்கு ரோந்து பணி

டி.ஐ.ஜி., சத்தியசுந்தரம் உத்தரவு



முதலியார்பேட்டை போலீஸ் நிலையத்தில் டி.ஐ.ஜி., சத்தியசுந்தரம், சீனியர் எஸ்.பி., கலவலகான் தலைமையில் மக்கள் குறை தீர்வு கூட்டம் நடந்தது.

புதுச்சேரி காவல் நிலையங்களுக்கு ஐ.எஸ்.ஓ., தரச்சான்று வழங்கல்





திருமாம்பாக்கம் போக்குவரத்து போலீஸ் நிலையத்தில் நடந்த மக்கள் மன்ற நிகழ்ச்சியில், சீனியர் எஸ்.பி., பிரிவின்குமார் திரிபாதி பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். அருகில், இன்ஸ்பெக்டர் தன்வந்திரி.

புதுச்சேரி நகராட்சி ஜப்தி தருட முயனறவர் கைது



புதுச்சேரி, மார்ச் 23: புதுச்சேரி நகரப் பகுதியான பசார் செயிட் லாரன்ட் வீதியில் புதுச்சேரி நகராட்சி வருவாய் அதிகாரி(1) அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகம் முன்பு, நேற்று முன்தினம் காலை 11.40 மணியளவில் வருவாய் அதிகாரியின் அரசு ஜீப் நிறுத்தப்பட்டு இருந்தது. அதன் டிரைவர் காந்திராஜ் (52), பக்கத்தில் உள்ள டீக்கடையில் டீ குடித்து கொண்டிருந்தார். அப்போது மர்ம நபர் ஒருவர் திடீரென ஜீப்பை திருடி செல்ல முயன்றார். இதை பார்த்த திடுக்கிட்ட டிரைவர் காந்திராஜ் சத்தம் போட்டார். அக்கம் பக்கத்தினர் உதவியுடன் அந்த நபரை ஜீப்புடன் மடக்கிப் பிடித்தனர். தகவலறிந்த ஒதியஞ்சாலை இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் தலைமையிலான போலீசார் அங்கு விரைந்து சென்று அந்த நபரை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரித்தனர். இதில் அவர், திருவண்ணாமலை மாவட்டம் சிங்காரப்பேட்டை பகுதியை சேர்ந்த சண்முகம் (2) என்பதும், ஏற்கனவே திருச்செங்கோட்டில் தமிழக அரசு பேருந்தை திருடிய வழக்கில் கைதாகி, சிறையில் இருந்து சமீபத்தில் வெளி வந்ததும் தெரியவந்தது. புதுச்சேரியில் நகராட்சிக்கு சொந்தமான ஜீப்பை திருடி முயன்று தற்போது சிக்கியுள்ளார். இதையடுத்து அவரை போலீசார் கைது செய்தனர். விசாரணைக்குப் பின், கோர்ட்டில் ஆஜர் படுத்தி அவரை சிறையில் அடைத்தனர்.



வழக்கமாக குற்ற செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை கண்காணித்து

குற்றங்கள் நடக்கும் முன் தடுக்க வேண்டு

போலீசாருக்கு முதல்வர் ரங்கசாமி அறிவுறுத்தல்



புதுச்சேரி, பண்ருட்டி, வடலூர், திருவண்ணாமலையில் கைவரிசை

போலி ஆதார் அட்டை வழங்கி விடுதிகளில் டி.வி. திருடிய வாலிபர் கைது

10 டி.வி.க்கள் பறிமுதல்

விடுதிகளில் திருடிய டிவிக்களுடன் கைதான வாலிபர்.



பெண் ஒருவருக்கு தெலெட்டை. ஐஜி. அஜித்குமார் சிங்லா வழங்கியபோ

புதுவை மாநிலத்தில் குற்ற சம்பவங்கள் குறைந்துள்ள

ஐ.ஜி.அஜித்குமார் சிங்லா பேச்சு



புதுச்சேரி மார்ச் 29: புதுச்சேரியில் வாகனப்பெருக்கம், சுற்றுலா பயணிகளின் வருகை காரணமாக நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது. வாரயிறுதி மற்றும் பண்டிகை நாட்களில் நகரில் வாகனங்களால் கடும் நெரிசல் ஏற்படுகிறது. இதற்காகவும் 10 நிமிடங்களுக்கு மேல் காத்திருந்து செல்லவேண்டியுள்ளது. நெரிசல் ஒரு புறம் இருந்தாலும் போக்குவரத்து விதிமீறல்களும் அதிகமாக நடக்கிறது.

இந்நிலையில் போக்குவரத்து நெரிசல் மற்றும் பாதிப்பு இருக்கும் பகுதிக்கு விரைவாக வாகனங்களில் ஒலிபெருக்கி, டைரன் விளக்கு கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் புதுச்சேரி நேரு வீதிக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தும் வகையில் வந்த டிஐஜி சத்தியசுந்தரம், டிராபிக் பட்ரோல் வாகனங்களை பார்வையிட்டார். இந்த ரோந்து வாகனங்கள் மூலம் போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தும், போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடுவோர் மீது வழக்கு பதிவும் போக்குவரத்து போலீசாருக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து டிராபிக் பட்ரோல் வாகன ரோந்து பணியை

டிராபிக் பட்ரோல் இருசக்கர வாகனங்களில் ரோந்து பணி

டிஐஜி சத்தியசுந்தரம் தொடங்கி வைத்தார்

புதுச்சேரியில் டிராபிக் பட்ரோல் இருசக்கர வாகனங்களில் போக்குவரத்து போலீசார் ரோந்து பணியை டிஐஜி சத்தியசுந்தரம் தொடங்கி வைத்தார். அருகில் போக்குவரத்து சீனியர் எஸ்பி பிரவின்குமார் திரிபாதி, எஸ்பிக்கள் செல்வம், மோகன்குமார்.



கோரிமேடு காவலர் பயிற்சி பள்ளியில் காவலர் வருடாந்திர மாநாட்டை தொடங்கி வைத்து போலீஸ் டி.ஜி.பி. ஷாலினி சிங் பேசியபோது எடுத்தபடம்.

போலீசாருக்கான வருடாந்திர மாநாடு:

புதுவை காவல்துறையின் திறமை உலக அளவில் தெரியவேண்டும்

டி.ஜி.பி. ஷாலினி சிங் பேச்சு

புதுச்சேரி, மார்ச்.27- புதுவை காவல்துறையின் திறமை உலக அளவில் தெரிய வேண்டும் என்று போலீசாருக்கான வருடாந்திர மாநாட்டில் டி.ஜி.பி. ஷாலினி சிங் பேசினார்.

ஏ.ஐ. தொழில்நுட்பம்

புதுச்சேரி காவல்துறையின் முதல் வருடாந்திர மாநாடு கோரிமேட்டில் உள்ள காவலர் பயிற்சி பள்ளியில் 2 நாட்கள் நடக்கிறது. இதன் தொடக்க விழா நேற்று நடைபெற்று விழாவிற்கு போலீஸ் டி.ஜி.பி. ஷாலினி சிங் தலைமை தாங்கி மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய தாவது:-

புதுச்சேரி மிகவும் அமைதியான மாநிலம். இங்குள்ள காவலர்கள் சுறுசுறுப்பாக



சைபர் கிரைம் போலீஸ் ஸ்டேஷனில் நடந்த மக்கள் மன்றம் நிகழ்ச்சியில், பொது மக்கள் தவறவிட்ட மொபைல் போன்கள், உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மக்கள் மன்றம் நிகழ்ச்சியில் 12 போன்கள் ஒப்படைப்பு

புதுச்சேரி, மார்ச் 23-

சைபர் கிரைம் ஸ்டேஷனில் நடந்த மக்கள் மன்றம் நிகழ்ச்சியில், பொது மக்கள் தவறவிட்ட ரூ. 2.50 லட்சம் மதிப்பிலான 12 மொபைல் போன்கள், உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

புதுச்சேரி சைபர் கிரைம் போலீஸ் ஸ்டேஷனில் நடந்த மக்கள் மன்றம் நிகழ்ச்சியில், பொது மக்கள் தவறவிட்ட ரூ. 2.50 லட்சம் மதிப்பிலான 12 மொபைல் போன்கள், உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

புதுச்சேரி சைபர் கிரைம் போலீஸ் ஸ்டேஷனில் நடந்த மக்கள் மன்றம் நிகழ்ச்சியில், பொது மக்கள் தவறவிட்ட 2 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான 12 மொபைல் போன்கள் கண்டுபிடிக்கப்பட்டு, உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

புதுச்சேரி சைபர் கிரைம் போலீஸ் ஸ்டேஷனில் நடந்த மக்கள் மன்றம் நிகழ்ச்சியில், பொது மக்கள் தவறவிட்ட ரூ. 2.50 லட்சம் மதிப்பிலான 12 மொபைல் போன்கள், உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

பால்கரன் தலைமை தாங்கினார். இன்ஸ்பெக்டர் கள் நியாகராஜன், கிரித்தி விபிப்பிரண்வ் ஏற்பாடுகளை மற்றும் போலீசார் கலந்து கொண்டனர்.

இதில், 358க்கும் மேற்பட்ட பொது மக்கள் பங்கேற்று, சைபர் கிரைம் தொடர்பாக பல்வேறு புகார்களை தெரிவித்தனர்.

இதில் ஏ.ஐ. தொழில்நுட்பம் குறித்து விளக்கப்பட்டது. மேலும் சட்டம்-ஒழுங்கு, சுகாதாரம், பாதுகாப்பு குறித்தும் தீர்வுகள் விளக்கி கூறப்பட்டது.

உயர் அதிகாரிகள் பங்கேற்பு

புதுவைக்கு நான்தோறும் ஏராளமான வெளிநாட்டுத் தூலா பயணிகள் வந்து செல் கின்றனர். அவர்கள் புதுவை யில் நிறைந்த காவலர்கள் உள்ள னர் என்பதை உணரும் அள வுக்கு உங்கள் சேவை இருக்க வேண்டும். அப்போது தான் புதுவை காவலர்களின் நிறமை உலகம் முழுவதும் தெரியவரும்.

இன்னாரு அவர் பேசினார். மாநாட்டில் போலீஸ் ஐஜி. ரோலின் ஜெனிதா, ஐஜி. சுபாஷ் சந்திரன், எஸ்பி. வம்சிதரெட்டி, எஸ்பி. பிரவின்குமார் திரிபாதி மற்றும் இன்ஸ்பெக்டர்கள், போலீஸ் சார் ஐஜி-கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

4 அமர்வுகள்

இந்த மாநாடு 4 அமர்வுகளாக நடைபெற உள்ளது. இதில் நகர்புற காவல், சைபர் கிரைம் போர்டிங், போதைப் பொருள் கடத்தல், கடலோர பாதுகாப்பு, முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு, சாலை பாதுகாப்பு, புதிய குற்றவியல் சட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் குறித்து போலீசார் விளக்கி கூற உள்ளனர்.

இன்று நிறைவு விழா இன்று (வியாழக்கிழமை) மாலை 5 மணிக்கு நடக்கிறது. இதில்



சட்டசபையை சுற்றிலும் பெண் கமாண்டோக்கள் பாதுகாப்பு

புதுவை சட்டசபையின் பட்ஜெட் கூட்டத்தொடர் தற்போது நடந்து வருகிறது. இதனிடையே பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர்கள், பணிநீக்க ஊழியர்கள், சமூக அமைப்பினர் என பல்வேறு தரப்பினரும் சட்டசபை வளாகிலேயே போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இதைத்தொடர்ந்து சட்டசபை பாதுகாப்புக்காக சட்டம்-ஒழுங்கு போலீசாருடன் கமாண்டோ படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். துப்பாக்கி ஏந்திய பெண் கமாண்டோக்கள் சட்டசபை வளாகத்தினை சுற்றி வலம் வந்து ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

படங்களுடன் புகார் எதிரொலி:

பஸ்களில் கூடுதல் கட்டணம் வசூலித்தால் கடும் நடவடிக்கை

போக்குவரத்து போலீசார் எச்சரிக்கை

பாகூர், மார்ச்.25- பஸ்களில் கூடுதல் கட்டணம் வசூலித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கூடுதல் கட்டணம் வதூல்

புதுச்சேரி - கடலூர் இடையே அரசு, தனியார் பஸ்கள் ஏராளமாக இயக்கப்பட்டு வருகின்றன. 10 நிமிடத்துக்கு ஒரு முறை பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக தனியாக பஸ்கள் அதிகளவில் இயக்கப்படுகிறது. பயணிகளை ஏற்றி இறக்குவதற்காக தனியார் பஸ்கள் போட்டி போட்டி இயக்கப்படுகின்றன.

இந்நிலையில் பஸ்களில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக கூறப்படுகிறது. இதனால் கண்டக்டர்களுக்கும், பய



தனியார் பஸ்சில் கட்டண விவரம் குறித்த நோட்டீசை போக்குவரத்து போலீசார் ஒட்டிய காட்சி.

இருந்து வருகிறது. கடலூர்- புதுச்சேரி 22 ரூபாய் தான் கட்டணம் வசூலிக்க வேண்டும். ஆனால் ஒரு சில பஸ்களில் ரூ.24 முதல் ரூ.28 வரை வசூலிப்பதாக கூறப்படுகிறது.

நோட்டீஸ் ஒட்டினர்

செய்தனர்.

அப்போது பயணிகளிடம் கூடுதலாக டிக்கெட் கட்டணம் கேட்டால் கொடுக்க வேண்டாம். இதுகுறித்து புகார் தெரிவித்தால் சம்பந்தப்பட்ட பஸ் நிறுவனத்தில் மீது சட்ட ப்படி நடவடிக்கை



திருநள்ளாறு சனீஸ்வரர் கோவில் பகுதியில் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா ஆய்வு செய்தபோது எடுத்த படம்.

திருக்கணித பஞ்சாங்கப்படி

திருநள்ளாறு சனீஸ்வரர் கோவிலில் வருகிற 29-ந்தேதி சனிப்பெயர்ச்சி விழா

பாதுகாப்பு ஏற்பாடுகளை சீனியர் போலீஸ் சூப்பிரண்டு ஆய்வு

காரைக்கால், மார்ச்.17- திருக்கணித பஞ்சாங்கப்படி திருநள்ளாறு சனீஸ்வரர் கோவிலில் 29-ந்தேதி சனிப் பெயர்ச்சி விழா நடக்கிறது. இதையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகளை சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா ஆய்வு செய்தார்.

சனிப்பெயர்ச்சி விழா

புதுவை மாநிலம் காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோவிலில் சனீஸ்வரர் தனி சன்னதி கொண்டு அருள்பாலித்து வருகிறார். இந்த கோவிலில் 2½ ஆண்டுக்கு ஒருமுறை சனிப்பெயர்ச்சி விழா நடைபெறுவது வழக்கம்.

போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா கூறுகையில் 'திருநள்ளாறு சனீஸ்வரர் கோவிலில் திருக்கணித பஞ்சாங்க முறையிலான சனிப்பெயர்ச்சி வருகிற 29-ந்தேதி வருகிறது. அதே நேரம் சனிக்கிழமையாகவும் உள்ளது. இந்த நாளில் கோவிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

எனவே, கோவில் சாமியை விரைவாக தரிசனம் செய்ய தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது' என்றார்.

போலி உயில் தயாரித்து நில மோசடி வழக்கில் மேலும் சிலருக்கு தொடர்பு

சி.பி.சி.ஐ.டி., விசாரணையில் 'திடுக்'





சைபர் கிரைம் குற்றங்களை தடுப்பது தொடர்பான பயிற்சி முகாமை ஐ.ஜி. அஜித்குமார் சிங்லா தொடங்கி வைத்து பேசியபோது எடுத்த படம்.

சைபர் குற்றங்களை தடுக்க

நவீன தொழில்நுட்பங்களை போலீசார் அறிந்துகொள்வது அவசியம்

ஐ.ஜி. அஜித்குமார் சிங்லா அறிவுறுத்தல்

புதுச்சேரி, மார்ச்.7- சைபர் குற்றங்களை தடுக்க போலீசார் தவிர பொதுமக்களும் அறிந்துகொள்வது அவசியம் என போலீஸ் ஐ.ஜி. அஜித்குமார் சிங்லா தெரிவித்துள்ளார்.

சைபர் கிரைம் பயிற்சி

புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள காவலர் பயிற்சி பள்ளியில் 'இந்தியன் சைபர் கிரைம் கோ-ஆர்டினேஷன் சென்டர்' திட்டத்தின் கீழ் சைபர் குற்றங்களை தடுப்பது குறித்த 2 நாள் பயிற்சி முகாம் நேற்று தொடங்கியது. முகாமை புதுவை போலீஸ் ஐ.ஜி. அஜித்குமார் சிங்லா தொடங்கி வைத்தார். சைபர் கிரைம் சிறப்பு போலீஸ் சூப்பிரண்டு (பொறுப்பு) கலைவாணன் தலைமை தாங்கினார். போலீஸ் சூப்பிரண்டுபாலக்ரன் முன்னிலை வகித்தார்.

முகாமை தொடங்கி வைத்து ஐ.ஜி. அஜித்குமார் சிங்லா பேசியதாவது:- 'இந்தியாவில் கடந்த ஆண்டு ஜூலை 31 முதல் டிசம்பர் வரை சைபர்மோசடி தொடர்பாக 9 ஆயிரத்து 32 ஆயிரத்து 103 புகார்கள் பெறப்பட்டுள்ளன. இதன் மூலம் பொதுமக்களிடம் ரூ.12 ஆயிரத்து 811 கோடிக்கு மோசடி நடந்துள்ளது.

இவற்றில் ரூ.2 ஆயிரத்து 114 கோடி மீட்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.1,574 கோடி முடக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் சைபர் குற்றங்களில் இழக்கும் பணம், ஹிப்டோ கரன்சிகளாக வெளிநாடுகளுக்கு மாற்றப்படுகிறது.

இதனை தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. சில நேரங்களில் வங்கிகள் ஒத்துழைப்பு அளிக்காததுடன் சரியான பதிலும் அளிப்பதில்லை. இதனால் சைபர் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்படுகிறது.

இதனை தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. சில நேரங்களில் வங்கிகள் ஒத்துழைப்பு அளிக்காததுடன் சரியான பதிலும் அளிப்பதில்லை. இதனால் சைபர் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்படுகிறது.

PUDUCHERRY POLICE



QUARTERLY NEWSLETTER

January - March, 2025

police.py.gov.in

@ Puducherry Police

@ PondyTraffic

@ Puducherry Police @ PondyTraffic